புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Puducherry - 605009.
Cell: 7810068421,9488420449

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 • இதழ்: 182 • 06-01-2026 • செவ்வாய் • பக்கம்- 4 • விலை- ரூ.5 • திருச்சி

Volum 01 • Issue: 182 • 06-01-2026 • Tuesday • Pages - 4 • Price- Rs. 5 • Trichy

## காமன்வெல்த் நாடுகளின் சபாநாயகர்கள் மாநாட்டை தொடங்கி வைக்கிறார் பிரதமர்



புதுடெல்லி: ஜன.6–

டெல்லியில் நடைபெறும் காமன்வெல்த் நாடுகளின் சபாநாயகர்கள் மாநாட்டை, ஜன.15ம் தேதி பிரதமர் மோடி தொடங்கி வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிட்டன், கனடா, இந்தியா உட்பட 56 நாடுகள் அங்கம் வகிக்கும், காமன்வெல்த் நாடுகளின் சபாநாயகர்கள் அமைப்பை, கடந்த 1969ம் ஆண்டு கனடாவின் அப்போதைய சபாநாயகர் லூசியன் லாமரெக்ஸ் உருவாக்கினார். சபாநாயகர்கள், அவைத் தலைவர்கள் நாடாளுமன்றத்தை பாரபட்சமின்றி நடத்துவது, நேர்மையாக நடத்துவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்த அமைப்பு தொடங்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த ஆண்டு பிரான்ஸ் கடல் பகுதியில் அமைந்துள்ள குரென்சீ தீவில் காமன்வெல்த் நாடுகளின் சபாநாயகர்கள் மாநாட்டு நடைபெற்றது. அதில் பங்கேற்ற இந்திய சபாநாயகர் ஓம் பிர்லா, 2026ல் நடைபெறும் மாநாட்டில் முக்கிய செயற்கை நுண்ணறிவை நாடாளு மன்றத்தில் பயன்படுத்துவது குறித்து விவாதிக்கப்படும் என்று பேசியிருந்தார்.

இந்நிலையில், 28வது காமன்வெல்த் நாடுகளின் சபாநாயகர்கள் மாநாடு, டெல்லியில் உள்ள சம்விதான் சதனில் (பழைய நாடாளுமன்ற கட்டிடம்) உள்ள மைய மண்டபத்தில் 14ம் தேதி முதல் 17ம் தேதி வரை நடத்த சபாநாயகர் ஓம் பிர்லா ஏற்பாடு செய்துள்ளார். இந்த மாநாட்டை பிரதமர் மோடி ஜன.15ம் தேதி தொடங்கி வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மாநாட்டில் 'நாடாளுமன்றத்தில் ஏஐ: சமமான புதுமைகள்', 'சமூக ஊடகங்கள் மற்றம் நாடாளுமன்ற பிரதிநிதிகள் மீது அவற்றின் தாக்கம்', 'பாதுகாப்பு, உடல் நலம், நாடாளுமன்ற பிரதிநிதிகள் மற்றும் ஊழியர்களின் நல்வாழ்வு' போன்ற தலைப்புகளில் கருத்தரங்குகள் நடைபெற உள்ளன.

முக்கியமாக, 'ஜனநாயகத்தின் கோயிலாக விளங்கும் நாடாளுமன்றத்தின் சபாநாயகர்கள் பங்கு' என்ற தலைப்பில் விவாதம் நடைபெற உள்ளது.

## 100 கிக் தொழிலாளர்களுக்கு மானிய விலையில் இஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டம்...

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

சென்னை : ஜன.6–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.1.2026) சென்னை, தீவுத்திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 100 தொழிலாளர்களுக்கு மானிய விலையில் (e-scooter) இஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



தமிழ்நாட்டில் உள்ள அமைப்புசாரா தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்திடவும், அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் நல உதவிகள் வழங்கிடவும், தமிழ்நாடு அரசால் 18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் அமைக்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் கல்வி, திருமணம், மகப்பேறு, இயற்கை மரணம், விபத்து மரணம், ஈமச்சடங்கு, விபத்து ஊனம், மாதந்திர ஓய்வூதியம் போன்ற நலதிட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நலவாரியம் மற்றும் இதர 18 நலவாரியங்களில் தற்போது 22,21,116 தொழிலாளர்கள் பதிவுசெய்துள்ளனர். வாரியங்கள் துவங்கப்பட்டது முதல் இதுவரை 47,07,977 பயனாளிகளுக்கு 2,341 கோடி ரூபாய் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், இவ்வரசு பொறுப்பேற்ற நாள் முதல் 31.12.2025 வரையிலான காலங்களில் 7,57,104 அமைப்புசாரா தொழிலாளர்கள் புதியதாக பதிவு செய்துள்ளனர். இக்காலகட்டத்தில் 1,210 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் 12,26,530 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், 60 வயது பூர்த்தியடைந்த பதிவு பெற்ற 2,07,260 அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ரூ.1200/ வீதம் ஓய்வூதியம் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 2,333 பெண் / திருநங்கை ஆட்டோ ஓட்டுநர்கள் புதியதாக ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்கும் செலவினத்தில் ரூபாய் ஒரு இலட்சம் வீதம் மானியமாக 23.33 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.


தமிழ்நாடு முழுவதும் இணைய சார்ந்த சேவை பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புசாரா கிக் தொழிலாளர்களின் (Gig Workers) நலனை பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கென தனியே நலவாரியம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்களால் 15.08.2023 அன்று சுதந்திர தின உரையில் அறிவிக்கப்பட்டு, அந்த அறிவிப்பிற்கிணங்க தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நல வாரியம் (Tamil Nadu Platform based Gig Workers Welfare Board) 26.12.2023 அன்று தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாரியத்தில் தமிழ்நாடு முழுவதும் 23,687 இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர்.

தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் ஓய்வு எடுக்கும் வகையிலும், கைபேசிக்கு மின்னூட்டம் (Charging) செய்வதற்கும், கழிப்பறை வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட ஓய்வுக்கூடங்கள் சென்னை மற்றும் கோயம்புத்தூர் போன்ற பெருநகரங்களில் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. மேலும், தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் அவர்களுக்கு விபத்து மரணம் மற்றும் விபத்து ஊனத்திற்கு ரூ.5 இலட்சம் வரையிலான குழு காப்பீட்டுத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்றுள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் 2,000 தொழிலாளர்களுக்கு புதிய e-Scooter வாங்கும் செலவினத்தில் ரூ.20,000/ மானியமாக வழங்கும் புதிய திட்டம் 20252026 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கு 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 100 தொழிலாளர்களுக்கு புதிய e-Scooter வாங்க மானியம் வழங்கும் திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

## சொத்து முடக்க நோட்டீஸுக்கு எதிரான அமைச்சர் ஐ.பெரியசாமியின் மனுவை தள்ளுபடி செய்தது ஐகோர்ட்



சென்னை: ஜன.6–

சொத்து முடக்கம் தொடர்பாக அமலாக்கத் துறை நோட்டீஸை எதிர்த்து தமிழக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 20062011ம் ஆண்டுகளில் காலக்கட்டத்தில் வீட்டு வசதித் துறை அமைச்சராக பதவி வகித்தபோது, வருமானத்துக்கு அதிகமாக 2 கோடியே ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் அளவுக்கு சொத்துகள் சேர்த்ததாக லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

இந்த வழக்கின் அடிப்படையில், சட்டவிரோத பண பரிமாற்றத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்த அமலாக்கத் துறை, அமைச்சர் பெரியசாமி, அவரது மகனும், பழனி தொகுதி திமுக எம்.எல்.ஏ.வுமான செந்தில்குமார், மகள் இந்திரா உள்ளிட்டோரின் வீடுகள் மற்றும் அமைச்சர், எம்எல்ஏ அலுவலகங்களில் கடந்த 2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சோதனை நடத்தினர்.

இந்த சோதனையில், சொத்து ஆவணங்கள், முதலீடு விவரங்கள், செல்போன், நிறுவனத்தின் வங்கிக் கணக்கு விவரங்கள் போன்றவற்றை அமலாக்கத் துறையினர் கைப்பற்றினர். இதன் தொடர்ச்சியாக சொத்துகளை முடக்கம் செய்வது தொடர்பாக விளக்கம் கேட்டு, அமைச்சர் ஐ. பெரியசாமி மற்றும் அவரது குடும்பத்தினருக்கு அமலாக்கத் துறை நோட்டீஸ் அனுப்பியது.

இந்த நோட்டீஸை எதிர்த்தும், அமலாக்கத் துறை விசாரணையை எதிர்த்தும் ஐ.பெரியசாமி மற்றும் அவரது குடும்பத்தினர் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு, தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி. அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்த போது, சொத்து முடக்கம் தொடர்பான விசாரணை அமலாக்கத் துறை அதிகாரிகள் முன் நிலுவையில் உள்ளதாக அமைச்சர் பெரியசாமி தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, அமலாக்கத் துறையை அணுகும்படி அறிவுறுத்திய நீதிபதிகள், அமைச்சர் ஐ.பெரியசாமி உள்ளிட்டோரின் மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

## கூட்டணி முடிவெடுக்க தினகரனுக்கு முழு அதிகாரம்:

### அமமுக பொதுக்குழு தீர்மானங்கள் என்னென்ன?



தஞ்சாவூர்: ஜன.6–

தேர்தலில் கூட்டணி அமைப்பது தொடர்பாக முடிவெடுக்கும் முழு அதிகாரமும் டிடிவி தினகரனுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு கூட்டம் தஞ்சாவூரில் நேற்று (ஜன.5) காலை நடைபெற்றது. கூட்டத்துக்கு வந்தவர்களை தஞ்சாவூர் மாநகர செயலாளர் ராஜேஸ்வரன் வரவேற்றார். கூட்டத்தில் பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் துணைப் பொதுச் செயலாளர் எம்.ரங்கசாமி உள்ளிட்ட மாநில நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம்:

› 2026ஆம் ஆண்டு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் கூட்டணி தொடர்பான அனைத்து முடிவுகளையும் எடுக்க கட்சியின் பொதுச் செயலாளர் டிடிவி தினகரனுக்கு முழு அதிகாரம் வழங்கப்படுகிறது.

› முல்லைப் பெரியாறு, காவிரியில் புதிய அணையை கட்ட முயற்சிக்கும் கர்நாடகம் மற்றும் கேரளா அரசுகளின் முயற்சியை தடுத்து நிறுத்திட திமுக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் .

› வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் மூலம் 2026ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் நியாயமானதாகவும், நேர்மையானதாகவும் நடைபெறுவதை உறுதி செய்ய தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

› தமிழகத்துக்கென தனியாக சாதி வாரி கணக்கெடுப்பினை நடத்திட தமிழக அரசின் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

› திமுக ஆட்சியில் ஈர்க்கப்பட்ட முதலீடுகள் மற்றும் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் குறித்து விரிவான அறிக்கையை தமிழக அரசு வெளியிட வேண்டும்.

› பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சம்பவங்களில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு உச்சபட்ச தண்டனையை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

› தமிழகத்தில் தொடரும் குற்றச் சம்பவங்களையும் போதைப்பொருட்களின் நடமாட்டத்தையும் இரும்பு கரம் கொண்டு ஒடுக்க தமிழக அரசின் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

› மத்திய அரசின் 100 நாள் வேலை திட்டத்தை மறு பரிசீலனை செய்து திருத்தங்களை மேற்கொள்ள மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

› கோவை மற்றும் மதுரை மாநகரங்களில் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்திட மத்திய மாநில அரசுகள் முன் வர வேண்டும்.

› இலங்கைக்கு தாரைவாக்கப்பட்ட கச்சத்தீவை மீட்டு தமிழக மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

› வடகிழக்கு பருவமழை மற்றும் டிட்வா புயலால் பாதிப்புக்கு உள்ளான விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட இழப்பீட்டை அதிகரித்து வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட 18 தீர் மானங்கள்நிறைவேற்றப்பட்டன.

## தஞ்சையில் நடைபெற இருந்த டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு தேதி மாற்றம்

சென்னை: ஜன.6–

தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் ஜனவரி 19ம் தேதி நடைபெற இருந்த 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' திமுக டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு ஜனவரி.26ம் தேதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து திமுக தலைமை வெளியிட்ட அறிக்கையில், 'பெரியார், அண்ணா, கருணாநிதி வழியில் மகளிர் மேம்பாட்டுக்கென தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து, 1.31 கோடி மகளிருக்கு 'மகளிர் உரிமைத் தொகை', 'விடியல் கட்டணமில்லா பேருந்துப் பயணம்', கல்வி கற்கும் மாணவிகளுக்கு 'புதுமைப் பெண் திட்டம்', வேலைக்குச் செல்லும் மகளிருக்கு பாதுகாப்பான 'தோழி விடுதி', இந்தியாவிலேயே அதிக அளவாக 43 சதவீதம் வேலைக்குப் போகும் பெண்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதற்கான சூழல் என மகளிர் மேம்பாட்டுக்காக தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து வரும் முதல்வர் ஸ்டாலின் தலைமையில், கடந்த 29.12.2025 அன்று திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில், 'பார் சிறுத்ததோ, படை பெருத்ததோ" என்று சொல்லத்தக்க வகையில், "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" திமுக மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு கறுப்பு சிகப்பு மகளிர் அணி படையின் மாபெரும் எழுச்சியோடு வெற்றிகரமாக நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் ஜனவரி 19ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அதற்குப் பதிலாக, 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' திமுக டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு தேதி மாற்றப்பட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றிட, வருகிற ஜனவரி 26ம் தேதி (26.01.2026 திங்கட்கிழமை மாலை 4.00 மணி அளவில் நடைபெற உள்ளது." எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# புதுச்சேரியில் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டம்: முதலமைச்சர் ரங்கசாமி தொடங்கி வைத்தார்!



புதுச்சேரி:ஜன,6

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, புதுச்சேரி மாநிலத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 5 பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் ரங்கசாமி இன்று தொடங்கி வைத்தார்.

திலாஸ்பேட்டையில் விழா புதுச்சேரி திலாஸ் பேட்டை பகுதியில் உள்ள நியாயவிலைக் கடையில் நடைபெற்ற விழாவில் முதலமைச்சர் ரங்கசாமி கலந்து கொண்டு, பொது மக்களுக்கு பொங்கல் பரிசுப் பொருட்களை வழங்கி இத்திட்டத்தை முறைப்படி தொடங்கி வைத்தார். இந்த பரிசுத் தொகுப்பில் பொங்கல் பண்டிகைக்குத் தேவையான 5 முக்கிய பொருட்கள் இடம் பெற்றுள்ளன.

இந்தத் தொடக்க விழாவில் அரசு உயர் அதிகாரிகள் மற்றும் முக்கிய அரசியல் பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர். செல்வம், சட்டப் பேரவை சபாநாயகர்.

திருமுருகன், குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர். லட்சுமி நாராயணன், பொதுப்பணித்துறை அமைச்சர்.

இத்திட்டத்தின் மூலம் புதுச்சேரியில் உள்ள சிவப்பு மற்றும் மஞ்சள் நிறக் குடும்ப அட்டை தாரர்கள் அனைவரும் பயன்பெறுவார்கள்.

முதலமைச்சர் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் இந்தப் பொருட்கள் விநியோகம் செய்யும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

பண்டிகை காலத்தை மக்கள் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கைக்குப் பொதுமக்கள் நெகிழ்ச்சியுடன் தங்களது நன்றிகளைத் தெரிவித்து வருகின்றனர்.






வேலூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட காட்பாடி தெற்கு ஒன்றியம் தேன்பள்ளி ஊராட்சி பாகம் எண் 49, 50 ல் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பரப்புரை காட்பாடி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கா.கருணாகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் D.M.கதிர் ஆனந்த் MP அவர்கள் பங்கேற்று பாக முகவர்கள் (BLA-2), பாக டிஜிட்டல் ஏஜென்ட் (BDA), பூத் கமிட்டி நிர்வாகிகள் (BLC), ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் கழக மூத்த முன்னோடிகளுக்கு தேர்தல் பரப்புரை களப்பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கினார். உடன் ஒன்றிய குழு தலைவர் M.வேல்முருகன், ஊராட்சிமன்ற தலைவர் ரகு.மாலதி, ஒன்றியகுழு உறுப்பினர் கண்ணன்.கலா, ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்துக்கொண்டனர்.

# புதுச்சேரியில் நம்மவர் கமல்ஹாசன் நற்பணி இயக்கம் சார்பில் 2026ஆம் ஆண்டு காலண்டர் வெளியீட்டு விழா.



புதுச்சேரி: ஜன.6–

புதுச்சேரி மாநில நம்மவர் கமல்ஹாசன் நற்பணி இயக்கம் சார்பில், 2026 ஆம் ஆண்டிற்கான புதிய காலண்டர் வெளியீட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழாவிற்கு மாநிலத் தலைவர் அரிகிருஷ்ணன் தலைமை தாங்கினார். மாநில பொதுச்செயலாளர் கமல்ராஜ் முன்னிலை வகித்து விழாவினைத் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் இயக்கத்தின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

கமல்ஜிப்பி, கமல் சசி, கமல் சுரேஷ், மேரி ரத்தனாகுமாரி, கமல் செழியன், முத்து கனி, வேணு, முருகன், யாமநாத், சுரேந்திரன், மற்றும் திரளான நற்பணி இயக்கத் தொண்டர்கள் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தனர். விழாவின் நிறைவாக, அனைவருக்கும் புதிய ஆண்டு காலண்டர்கள் வழங்கப்பட்டன.

# மாவட்டச் செயலாளர்கள் கருத்துகளின்படியே தேர்தல் கூட்டணி": பிரேமலதா விஜயகாந்த் உறுதி

சென்னை: ஜன.6–

"2026 தேர்தலில் யாருடன் கூட்டணி என மாவட்டச் செயலாளர்கள் தங்களின் கருத்துகளை எழுதி பெட்டியில் போட்டுள்ளனர். அவர்களின் கருத்து அந்தந்த மாவட்ட மக்களின் கருத்து. அதன்படியே கூட்டணியை முடிவு செய்து வரும் 9ம் தேதி கடலூர் மாநாட்டில் அறிவிப்பேன்" என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

ஜனவரி 9ம் தேதி நடைபெற உள்ள மாநாட்டுப் பணிகள் குறித்து தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமையில், அக்கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் சென்னை கோயம்பேட்டில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

மேலும், மாநாட்டுக்கு தொண்டர்களை அழைத்து வருவது, சட்டப்பேரவைத் தேர்தலை சந்திப்பது, கூட்டணி குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தெரிகிறது.

பின்னர், பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்களிடம் பேசும்போது, "தமிழகத்தில் தொடர் போராட்டங்கள் நடைபெற்று வருகிறது. தேர்தலை ஒட்டி, பல திட்டங்கள் அறிவிக்கப்படுகிறது. பொங்கல் பரிசுத் தொகை அனைவருக்கும் சென்று சேர வேண்டும்.

மாநாட்டுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டு வருகிறது.

2026 தேர்தலில் யாருடன் கூட்டணி என மாவட்டச் செயலாளர்கள் தங்களின் கருத்துகளை எழுதி பெட்டியில் போட்டுள்ளனர். அவற்றை பிரித்து படிக்க இருக்கிறேன். அவர்களின் கருத்து அந்தந்த மாவட்ட மக்களின் கருத்து. அதன்படியே கூட்டணியை முடிவு செய்து வரும் 9ம் தேதி கடலூர் மாநாட்டில் அறிவிப்பேன். தமிழகத்தில் உள்ள அனைத்து கட்சிகளும் தேமுதிகவுக்கு தோழமைக் கட்சி தான். திமுக 50% வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளனர்.

இன்னும் 50% வாக்குறுதிகளை நிறைவேற்ற இல்லை. திமுக ஆட்சியில் போதைப்பொருள் விற்பனை, சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. இதை யாரும் மறுக்க முடியாது. வரும் தேர்தலில் மக்கள் விரும்பிய அணி நிச்சயம் வெற்றி பெறும். ஆட்சியில் பங்கு என்ற குரல் இப்போது ஓங்கி ஒலிக்கிறது. அதற்கு சாத்தியமும் இருக்கிறது.

திமுக சிறந்த ஆட்சி கொடுத்ததா என்பதை மக்கள்தான் சொல்ல வேண்டும். ஆளும் கட்சியே சொல்லிக் கொள்ள முடியாது. நிச்சயமாக 2026 தேர்தல் ஒரு மாறுபட்ட தேர்தலாக இருக்கும்.

தை பிறந்தால் வழி பிறக்கும். வருகின்ற தேர்தலில், தமிழ்நாட்டுக்கும் தமிழக மக்களுக்கும் நல்லது நடக்கும் ஒரு தேர்தலாக இருக்கும் இந்த நிமிடம் வரை உறுதியான கூட்டணியை யாரும் அறிவிக்கவில்லை" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் நம்பெருமாள் கைத்தல சேவை: இன்று திருமங்கை மன்னன் வேடுபறி

திருச்சி: ஜன.6–

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் வைகுண்ட ஏகாதசிப் பெருவிழாவில் ராப்பத்து உற்சவத்தின் 7ம் நாளான இன்று மாலை நம்பெருமாள் கைத்தல சேவை நடைபெறுகிறது. இதையொட்டி பிற்பகல் 3 மணிக்கு நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு சொர்க்க வாசலை கடந்தார். திருமங்கை மன்னன் வேடுபறி நாளை நடக்கிறது. பூலோக வைகுண்டம் என போற்றப்படுவதும், 108 வைணவ தலங்களில் முதன்மையானதுமான ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் வைகுண்ட ஏகாதசி விழா கடந்த 19ம் தேதி திருநெடுந்தாண்டகத்துடன் தொடங்கியது. 20ம் தேதி பகல்பத்து எனப்படும் திருவாய்மொழி திருநாள் தொடங்கியது.

பகல் பத்து நாளில் நாச்சியார் திருக்கோலம் எனப்படும் மோகினி அலங்காரத்தில் நம்பெருமாள் அருள்பாலித்தார். விழாவின் முக்கிய நிகழ்ச்சியான பரமபத வாசல்(சொர்க்கவாசல்) திறப்பு கடந்த 30ம் தேதி நடந்தது. தொடர்ந்து ராப்பத்து உற்சவங்கள் நடைபெற்று வருகிறது. ராப்பத்து உற்சவத்தின் 7ம் நாளான இன்று மாலை நம்பெருமாள் திருக்கைத்தல சேவை நடைபெறுகிறது. இதையொட்டி பிற்பகல் 3 மணிக்கு நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு சொர்க்க வாசலை கடந்தார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு மாலை 5.45 மணிக்கு திரு மாமணி மண்டபத்தை வந்தடைகிறார். அங்கு திருக்கைத்தல சேவை (நம்மாழ்வார் பராங்குச நாயகியான திருக்கோலத்தில்) நடைபெறுகிறது.

அதன்பின், உபயதாரர் மரியாதையுடன் பொது ஜனசேவை நடைபெறும். இரவு 11.30 மணிக்கு திருமாமணி மண்டபத்தில் இருந்து புறப்பட்டு வீணை வாத்தியத்துடன் நம்பெருமாள் மூலஸ் தானம் சென்றடைகிறார். ராப்பத்து உற்சவத்தின் 8ம் நாளான இன்று(6ம் தேதி) திருமங்கை மன்னன் வேடுபறி நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதையொட்டி, மாலை 5 மணிக்கு சந்தனு மண்டபத்தில் இருந்து நம்பெருமாள் தங்க குதிரை வாகனத்தில் புறப்பட்டு வையாளி வகையறா கண்டருளுகிறார். இரவு 7.30 மணிக்கு திரு மாமணி மண்டபம் சென்றடைகிறார்.

அங்கு உபயதாரர் மரியாதையுடன் பொதுஜன சேவை நடைபெறுகிறது. இரவு 11 மணிக்கு திரு மாமணி மண்டபத்தில் இருந்து புறப்பட்டு வீணை வாத்தியத்துடன் நம்பெருமாள் நள்ளிரவு 12.15 மணிக்கு மூலஸ்தானம் சென்றடைகிறார். நாளை சொர்க்கவாசல் திறக்கப்படாது. விழாவின் 10ம் திருநாளான 8ம் தேதி தீர்த்தவாரி நடைபெறும். வரும் 9ம் தேதி நம்மாழ்வார் மோட்சம், இயற்பா சாற்றுமறை நிகழ்ச்சியுடன் வைகுண்ட ஏகாதசி விழா நிறைவடைகிறது.

# சின்னாறு அணையில் இருந்து பாசனத்துக்காக 400 கன அடி நீர் திறப்பு!

தருமபுரி: ஜன.6–

பாலக்கோடு அருகே சின்னாறு அணையில் இருந்து பாசனத்துக்காக 400 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது. அணையில் இருந்து வலது புறக்கால்வாய் வழியாக 140 நாள்களுக்கு, மாவட்ட ஆட்சியரால் தண்ணீர் திறந்து வைக்கப்பட்டது.

# விநாயகா முருகன் ஸ்வீட்ஸ் நிறுவனர் ராஜசேகர் அவர்களின் 3ம் ஆண்டு நினைவு அஞ்சலி

## புதுச்சேரி முழுவதும் உள்ள கிளைகளில் இலவச பால், காபி, டீ வழங்கல்



புதுச்சேரி: ஜன.6–

முதலியார் பேட்டையில் அமைந்துள்ள புகழ்பெற்ற ஸ்ரீ விநாயகா முருகன் ஸ்வீட்ஸ் – பேக்கரி நிறுவனத்தின் நிறுவனர் தலைவர் P. ராஜசேகர் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு தினம் (05.01.2026) கடைபிடிக்கப்பட்டது.

தலைவர்கள் அஞ்சலி: இந்நிகழ்வில், முன்னாள் முதலியார் பேட்டை சட்டமன்ற உறுப்பினர் பாஸ்கர் அவர்கள் கலந்து கொண்டு, மறைந்த P. ராஜசேகர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அவரைத் தொடர்ந்து, அரியாங்குப்பம் சட்டமன்ற உறுப்பினர் (எ) தட்சிணாமூர்த்தி அவர்களும் நேரில் வருகை தந்து மலர் அஞ்சலி செலுத்தினார்.

நிறுவனர் P. ராஜசேகர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், புதுச்சேரியில் உள்ள அனைத்து ஸ்ரீ விநாயகா முருகன் ஸ்வீட்ஸ் – பேக்கரி கிளைகளிலும் இன்று ஒரு நாள் முழுவதும் பால், காபி மற்றும் டீ ஆகியவை பொது மக்களுக்கு இலவசமாக (பிரசாதமாக) வழங்கப்படும் என்று நிர்வாகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு பொது மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

P. ராஜசேகர் அவர்களின் மனைவி சுபா ராஜசேகர், மகன்கள் சதீஷ் மற்றும் கிஷோர் ஆகியோர் முன்னின்று முதலியார் பேட்டை தலைமையகத்தில் பிரம்மாண்ட அன்னதான நிகழ்ச்சியை நடத்தினர். இதில் சுமார் 2000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு உணவுகள் வழங்கப் பட்டன.

தங்கள் தந்தையின் நினைவாக மக்கள் சேவையைத் தொடரும் வகையில் மேற்கொள்ளப் பட்ட இந்த நற்பணிகளில் அரசியல் பிரமுகர்கள், வணிகப் பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட அரசுதுறை ஊர்தி ஓட்டுநர்கள் நடத்தும் கண் மற்றும் பொது மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சியர் கந்தசாமி தொடங்கி வைத்தார். இவ்விழாவினை மாநில தலைவர் கே எஸ் சண்முகம் தலைமையில் மாநில துணைத்தலைவர் கே எம் முருகேசன் மாநில செயலாளர் பாபு மாநில பொருளாளர் பூவேந்திரன் மற்றும் டி ஆர் ஓ ஓட்டுநர் பழனிச்சாமி பி டபிள்யு டி ஓட்டுனர் பாலாஜி என செயற்குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்

# திருவள்ளூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ மதிப்பீட்டு முகாம்

## மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்



திருவள்ளூர் ஜன 06 :

திருவள்ளூர் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, பிறப்பு முதல் 18 வயதுக்குட்பட்ட மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கான உள்ளடங்கிய கல்வி திட்டத்தின் கீழ் 06.01.2026 முதல் 09.02.2026 வரை மருத்துவ மதிப்பீட்டு முகாம் ஒன்றியம் வாரியாக காலை 9.30 முதல் மதியம் 1.00 மணி வரை நடைபெறும்.

மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ மதிப்பீட்டு முகாம் 06.01.2026 அன்று திருவள்ளூர் ஊ.ஒ.தொ. பள்ளி, வேப்பம்பட்டு, 08.01.2026 அன்று திருத்தணி அ.பெ.மே.நி. பள்ளி, திருத்தணி, 09.01.2026 அன்று பூண்டி அ.மே.நி.பள்ளி, பூண்டி, 20.01.2026 அன்று சோழவரம்,புழல் அ.ஆ மே.நி.பள்ளி, சோழவரம், 22.01.2026 அன்று பள்ளிப்பட்டு வட்டார வளர்ச்சி அலுவலகம் , வட்டார வள மையம், பள்ளிப் பட்டு, 23.01.2026 அன்று மீஞ்சூர் அ.ஆ.மே.நி. பள்ளி, பொன்னேரி, 27.01.2026 எல்லாபுரம் அ.மே.நி.பள்ளி, பெரிய பாளையம், 29.01.2026 அன்று வில்லிவாக்கம் ந.தொ.பள்ளி, சத்திய மூர்த்தி, 30.01.2026 கடம் பத்தூர் அ.மே.நி.பள்ளி, கடம்பத்தூர், 03.02.2026 அன்று திருவாலங்காடு அ.மே.நி.பள்ளி, திருவாலங்காடு, 05.02.2026 அன்று ஆர்.கே.பேட்டை அ.பெ.மே.நி.பள்ளி, ஆர்.கே.பேட்டை, 06.02.2026 அன்று கும்மிடிப்பூண்டி அ.பெ.மே.நி.பள்ளி, கும்மிடிபூண்டி, 09.02.2026 அன்று பூவிருந்தவல்லி சரோஜினிவரதப்பன். பெ.மே.நி.பள்ளி, பூந்தமல்லியில் நடைபெறும்.

இம்மருத்துவ மதிப்பீட்டு முகாமில் சார்ந்த ஒன்றியங்களில் உள்ள மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம். மேலும் இம் முகாமில் தேசிய அடையாள அட்டை இல்லாதவருக்கு அடையாள அட்டையும் மற்றும் உதவி உபகரணங்கள் தேவைப்படு வோருக்கு அதற்கான ஏற்பாடும் செய்யப் படவுள்ளது. எனவே இம்முகாமிற்கு வரும் மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகள் 4 புகைப் படம், குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டை நகலுடன் வர வேண்டும் என திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# சேலத்தில் திமுக"வை விளாசிய இபிஎஸ் சம்பளம் கூட தர முடியாத அரசு.

சேலம். ஜன. 6–



திமுக என்பது ஒரு அரசியல் கட்சியே அல்ல, அது ஒரு கார்ப்பரேட் கம்பெனி. தமிழகத்தில் நடைபெற்று வரும் வாரிசு அரசியலுக்கும், குடும்ப ஆட்சிக்கும் வரும் 2026 சட்டமன்றத் தேர்தல் முற்றுப் புள்ளி வைக்கும்," என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம் வீரபாண்டி தொகுதியில் நடைபெற்ற அதிமுக பொதுக்கூட்டத்தில் பங்கேற்று அவர் பேசியதாவது:

திமுகவில் குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு மட்டும்தான் உயர் பதவிகள் கிடைக்கும். அக்கட்சியில் நீண்ட காலம் சட்டமன்ற உறுப்பினராகவும், அனுபவம் வாய்ந்தவராகவும் இருக்கும் துரைமுருகனுக்குக் கூட துணை முதல்வர் பதவி வழங்கப்படவில்லை. அவர் கருணாநிதி குடும்பத்தில் பிறக்கவில்லை என்பதுதான் அதற்கு ஒரே காரணம். மூத்த தலைவர்களைப் புறக்கணித்துவிட்டு, வாரிசுகளுக்கு மகுடம் சூட்டுவதே திமுகவின் வாடிக்கையாக உள்ளது.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. மாநிலத்தைப் பாதுகாக்க வேண்டிய டிஜிபி பதவிக்கே இன்னும் ஒரு நிரந்தர அதிகாரியை நியமிக்க முடியாத நிலையில் இந்த அரசு உள்ளது. மக்களைப் பாதுகாக்கும் எண்ணம் முதல்வருக்கு இருந்தால், உடனடியாக டிஜிபியைப் பணியமர்த்த வேண்டும். இன்று தமிழக இளைஞர்கள் போதைப்பொருட்களால் சீரழிந்து வருகின்றனர். சிறுவர்கள் கூட வன்முறையில் ஈடுபடும் அளவிற்கு சட்டம் ஒழுங்கு மோசமடைந்துள்ளது. இதைப் பற்றி முதல்வர் ஸ்டாலினுக்கு எந்தக் கவலையும் இல்லை.

திமுக அரசு நிதி மேலாண்மையில் முற்றிலும் தோல்வியடைந்துவிட்டது. 100 நாள் வேலைத் திட்டத்தில் பணியாற்றும் ஏழை மக்களுக்கு முறையாகச் சம்பளம் கூட வழங்க முடியாத கையாலாகாத அரசாக இது உள்ளது. அரசு கஜானாவில் நிதி இல்லை என்று கூறிக்கொண்டு, துணை முதல்வர் உதயநிதி கார் பந்தயம் நடத்துகிறார். இது எத்தகைய மக்கள் நலன் என்று புரியவில்லை.

சேலம் மாவட்டம் எப்போதும் அதிமுகவின் கோட்டை. திமுக ஆளுங்கட்சியாக இருந்தாலும் இங்கு அவர்களால் எந்தப் புதிய திட்டத்தையும் கொண்டுவர முடியவில்லை. மீண்டும் ஆட்சியமைக்க வேண்டும் என்ற திமுகவின் கனவு ஒருபோதும் நிறைவேறாது. வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் அதிமுக பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியில் அமரும். தமிழகத்தில் குடும்ப அரசியலுக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.

# திருப்பூர் சந்திரகாவி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் ரூ.1.59 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் மேயர் திறந்து வைத்தார்!!



அனுப்பர்பாளையம், ஜன.6

திருப்பூர் சந்திராகாவி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் ரூ.1கோடியே 59 லட்சத்து 60 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 8 புதிய வகுப்பறைகள் திறப்பு விழா, பள்ளி வளாகத்தில் நடந்தது. மாநகராட்சி 28வது வார்டு கவுன்சிலர் சேகர் தலைமை தாங்கினார்.

கல்வி குழுத் தலைவர் திவாகர் முன்னிலை வகித்தார். பள்ளி தலைமை ஆசிரியை ஞானாம்பாள் வரவேற்று பேசினார்.

மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) சித்ரா, வட்டார கல்வி அலுவலர் சியாமளா, வட்டார கல்வி அலுவலர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு மேயர் தினேஷ்குமார் புதிய வகுப்பறைகளை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். நிறைவில், பட்டதாரி ஆசிரியர் சிவராஜ் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில், தொழிலதிபர் கந்தசாமி, ஆசிரியர்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்ட ஆடுசியர் அலுவலகத்தில் அமைச்சர் இரா. இராஜேந்திரன் மற்றும் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் ஆகியோர் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.8 லட்சம் மதிப்பீட்டிலான உதவி உபகரணங்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா பிருந்தாதேவி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செண்பகவள்ளி, சேலம் உருக்காலை நிர்வாக இயக்குனர் பிசாரே, முதன்மை பொது மேலாளர் சிவசங்கர் ஆகியோர் உள்ளனர்.




மாவட்ட முதன்மை நீதிபதி சமீனா, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 9வது சித்த மருத்துவ முகாமினை திறந்து வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜாதா, உதவி சித்த மருத்துவ அலுவலர் கண்ணன் உட்பட பலர் உள்ளனர்.

# வெனிசுலா பிரச்சினை: சென்னையில் அமெரிக்க தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை நடத்துகிறது இந்திய கம்யூ.

சென்னை: ஜன.6–

'வெனிசுலாவை விட்டு அமெரிக்கப் படைகள் உடனடியாக வெளியேற வலியுறுத்தி சென்னை அமெரிக்க தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டம் இன்று (ஜன.6) சென்னையில் நடத்தப்படும்' என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சோசலிச கொள்கைகளை கடைபிடிக்கும், எண்ணெய் வளமிக்க தென் அமெரிக்க நாடான வெனிசுலாவின் மீது அமெரிக்கா கொடூரமான ராணுவத் தாக்குதலை நடத்தியுள்ளது. அந்த நாட்டின் அதிபர் நிக்கோலஸ் மதுரோவையும் அவரது மனைவி சிலியா ஃப்ளோரஸையும் கைது செய்து, தனது நாட்டுக்கு, அமெரிக்கா நாடு கடத்தி உள்ளது. இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. வெனிசுலாவின் சுதந்திரத்துக்கும், ஜனநாயகத்துக்கும், இறையாண்மைக்கும், சுயநிர்ணய உரிமைக்கும் எதிரான அமெரிக்காவின் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையை கண்டித்தும், வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவையும் அவரது மனைவியையும், அமெரிக்கா நிபந்தனை இன்றி உடனடியாக விடுதலை செய்திடக் கோரியும், வெனிசுலாவை விட்டு அமெரிக்கப் படைகள் உடனடியாக வெளியேற வலியுறுத்தியும், ஒன்றிய மோடி அரசு அமெரிக்காவை கண்டிப்பதோடு 'வெனிசுலாவுக்கு ஆதரவாக குரல் எழுப்பிட வேண்டும் என வலியுறுத்தியும் நாளை (ஜன.6) காலை 10.30 மணிக்கு, சென்னை அண்ணாசாலையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நடத்துகிறது. இந்தப் போராட்டத்துக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநில செயலாளர் இரா.முத்தரசன் தலைமை தாங்குகிறார். கட்சியின் மாநில துணைச் செயலாளர் எம்.ரவி, தேசியக் குழு உறுப்பினர்கள் வஹிதா நிஜாம், டாக்டர் ஜி. ஆர்.இரவீந்திரநாத் ஆகியோர் கண்டன உரையாற்றுகின்றனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தென் சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.கே. சிவா, மத்தியச் சென்னை மாவட்டச் செயலாளர் மு.வரதன், வட சென்னை மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, செங்கல்பட்டு மாவட்டச் செயலாளர் ஏ.ராஜ்குமார், காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் பி.வி.சீனிவாசன், திருவள்ளூர் மாவட்டச் செயலாளர் கே.கஜேந்திரன் ஆகியோர் இப்போராட்டத்திற்கு முன்னிலை வகிக்கின்றனர்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துவரங்குறிச்சிறிச்சி அருகே கள்ள சந்தையில் விற்பனைக்காக மது பாட்டில்களை கடத்த சென்றவரை திருச்சி மாவட்ட தனிப்படை போலீசார் கைது செய்தனர் :

திருச்சி. ஜன.6–

திருச்சி மாவட்டம் , துவரங்குறிச்சி அருகே தொட்டியபட்டி, மேடுகாட்டுப்பட்டி கிராமத் தில் வசிக்கும் பழனி கவுண்டர் மகன் கிருஷ்ணன் (39 ), என்பவர் மணப்பாறை கோவில்பட்டி செல்லும் சாலையில் 50 திற்கும் மேற்பட்ட மது பாட்டில்களை கள்ள சந்தையில் விற்பனைக்காககடத்தி சென்றபோதுதிருச்சிமாவட்டகாவல் கண்காணிப்பாளர் செல்வ நாகரத்தினம் தனிப்படையினர் அவரைபிடித்துவளநாடுகாவல்நிலையத்தில்ஒப்படைத்தனர் . மேலும் கிருஷ்ணன் என்பவர் மீது வளநாடு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து சிறையில் அடைத்தனர்.

# பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் நெமிலிச்சேரி சந்திப்பில் ரூ. 35 லட்சம் மதிப்பீட்டில் ரவுண்டானா பணிகள்

## அமைச்சர் சா.மு.நாசர் அடிக்கல் வைத்து துவக்கி வைத்தார்



திருவள்ளூர் ஜன 06 : திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் நெமிலிச்சேரி ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் தனியார் நிறுவனங்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதி திட்டத்தின் கீழ் நெமிலிச்சேரி சந்திப்பில் ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ரவுண்டானா பணிகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமையில் அடிக்கல் வைத்து பணிகளை துவக்கி வைத்து பேசினார்.

பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் நெமிலிச்சேரி ஊராட்சி பகுதியிலுள்ள மேம்பாலம் மீஞ்சூர் வண்டலூர் ஆகிய பகுதியை இணைக்கும் பிரதான இடமாக திகழ்கிறது. இம்மேம்பாலம் அருகில் நீரூற்றுடன் கூடிய ரவுண்டானா அமைக்கும் பணிகளை துவக்கி வைக்கும் விதமாக ஊரக வளர்ச்சித் துறை சார்பில் தனியார் நிறுவனங்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் மின் விளக்குகள், தாவரங்கள், நீரூற்று , தமிழ் சின்ன சிற்பம் ஆகியவை கிரில் வேலியுடன் அமைக்கப்படவுள்ளது என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் கூறினார்.

இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநரும் திட்ட இயக்குநருமான வை.ஜெயகுமார், செயற்பொறியாளர் ஊரக வளர்ச்சி தணிகாசலம், உதவி செயற்பொறியாளர் மாரிச்செல்வம், பூவிருந்தவல்லி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மகேஷ்பாபு, அமிழ்தமன்னன், ஆவடி வட்டாட்சியர் கண்ணன், உதவி பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இந்திய மருத்துவ சங்க கோவை அமைப்பின் 102வது ஆண்டின் புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா!!




கோவை ஜனவரி:06

இந்திய மருத்துவ சங்க கோவை அமைப்பின் 102வது தலைவராக டாக்டர் கோஷல்ராம் பொறுப்பேற்றார்.

2026 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகக் குழுவில் செயலாளராக டாக்டர் பரமேஸ்வரன் அவர்களும், நிதிச் செயலாளராக டாக்டர் பாலமுருகன் அவர்களும் பொறுப்பேற்றனர்.

இந்தப் பதவி ஏற்பு விழா கோயம்புத்தூரில் உள்ள இந்திய மருத்துவ சங்கத்தின் கூட்டம் அரங்கில் நடைபெற்றது.

விழாவில் முதன்மை விருந்தினராக இந்திய மருத்துவ சங்கத்தின் தமிழ்நாடு மாநில கிளையின், தலைவர் டாக்டர் ஸ்ரீதர், தலைவர், கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக காமன்வெல்த் மருத்துவ சங்கத்தின், தலைவர், டாக்டர் ஜெயலால், மற்றும் ஹாஸ்பிடல் போர்ட் ஆஃப் இந்தியா தலைவர், டாக்டர் அபுல் ஹசன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் விழாவில் 2026 ம் ஆண்டிற்கான இந்திய மருத்துவ சங்கத்தின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் தேர்வு டாக்டர் A.K. ரவிகுமார், 2027 ஆம் ஆண்டிற்கான மாநிலத் தலைவர், டாக்டர் N.R.T.R. தியாகராஜன், மாநில கௌரவச் செயலாளர், டாக்டர் திரவியன் மோகன், மாநில நிதிச் செயலாளர், டாக்டர் சாலமன் ஜெயா, முன்னாள் மாநிலச் செயலாளர், டாக்டர் கார்த்திக் பிரபு, ஆகியோர் வாழ்த்தி பாராட்டினர்.

இந்த நிகழ்வில் இந்திய மருத்துவ சங்கத்தின் கோயம்புத்தூர் கிளை சார்பில் மூன்று முக்கிய முன்னோடி திட்டங்கள் அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டன:

1. சர்க்கரை நோய் (Diabetes) குறித்த விழிப்புணர்வு
2. கண் தானம் குறித்த விழிப் புணர்வு
3. Drug Abuse தடுப்பு குறித்த விழிப்புணர்வு

விழாவில் இந்திய மருத்துவ சங்கத்தின் பல மாநில மற்றும் உள்ளூர் மூத்த தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# மாவட்ட அளவிலான தொழில் பங்கீட்டாளர்களை தேர்ந்தெடுத்தல்.

திருச்சி. ஜன. 6–

தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET), பாரத்நெட் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் உயர்தர இணைய சேவைகளை வழங்கும் நோக்கில் மாவட்ட அளவிலான தொழில் பங்கீட்டாளர்களை (DLFP தேர்வு செய்யும் பணிகளை தொடங்கியுள்ளது.

மாநிலத்தில் பாரத்நெட் பணிகள் சுமார் 95மூ வரை நிறைவடைந்துள்ளன. தமிழ்நாட்டின் 37 மாவட்டங்களிலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது இரண்டு தொழில் பங்கீட்டாளர்களை தேர்வு செய்து, தடையில்லா இணைய சேவைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒவ்வொரு மாவட்டமும் வருவாய் உட்கோட்டம் (Revenue Division) அடிப்படையில் 2 முதல் 6 வட்டாரங்களை கொண்ட துணைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, தொழில் பங்கீட்டாளர்கள் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பதாரர் அதிகபட்சம் இரண்டு மாவட்டங்களுக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவார். அந்த மாவட்டங்கள், நிறுவனம்ஃ நிறுவனத்தின் வணிகச் செயல்பாட்டுப் பகுதி அமைந்துள்ள மாவட்டம் மற்றும் அல்லது தனிப்பட்ட விண்ணப்பதாரரின் முகவரி அமைந்துள்ள மாவட்டமாக இருக்க வேண்டும்.

தேர்வு செய்யப்படும் தொழில் பங்கீட்டாளர்களின் முக்கிய பொறுப்புகளில், Optical Fibre Cable (OFC) மற்றும் Optical Network Terminal (ONT) பராமரிப்பு, தடையில்லா இணைய சேவை வழங்குதல், முகுஊ பராமரிப்பு பணிகள், சேவை தடைகளை காலதாமதமின்றி சரிசெய்தல், Service Level Agreement (SLA) விதிமுறைகளை பின்பற்றுதல் மற்றும் சேவை கிடைப்புத் தரத்தை பராமரித்தல் ஆகியவை அடங்கும்.

விண்ணப்ப பதிவு நடைமுறை TANFINET இணையதள போர்டல் (https://tanfinet.tn.gov.in) மூலம் நடைபெறும். விண்ணப்பதாரர்கள் அறிவிப்பு மற்றும் தொடர்புடைய ஆவணங்களைப் பதிவிறக்கம் செய்து, தேவையான ஆவணங்களை பதிவேற்றம் செய்து, தாங்கள் செயல்பட விரும்பும் துணைப் பிரிவு ஐ(Division) தேர்வு செய்ய வேண்டும். ஒவ்வொரு துணைப் பிரிவுக்கும் ரூ.25,000ஃ (திரும்பப் பெறக்கூடிய, வட்டியில்லா) விண்ணப்ப பாதுகாப்பு வைப்பு தொகை செலுத்த வேண்டும்.

தேர்வு செய்யப்படும் பங்கீட்டாளர்கள், ஒவ்வொரு வட்டாரங்களுக்கும் ரூ.2,00,000ஃ பாதுகாப்பு வைப்பு தொகை செலுத்திய பின்னர், TANFINET தலைமையகத்தால் பணி ஆணை ((Work Order) வழங்கப்படும்.

இந்த நோக்கத்திற்கான TANFINET விண்ணப்ப இணையதள போர்டல் (https://tanfinet.tn.gov.in). . 01.01.2026 முதல் 14.01.2026 வரை செயல்படும். ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் உதவிக்கு (Helpdesk Number 044-24965595 என்ற தொலைபேசி எண்ணில் தொடா;பு கொண்டு விபரங்களை தெரிந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

# கும்மிடிப்பூண்டி மற்றும் திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான சிறப்பு முகாம்

## மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் ஆய்வு



திருவள்ளூர் ஜன 06 :

இந்திய தேர்தல் ஆணையம் 01.01.2026 தேதியை அடிப்படையாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 பணியை மேற்கொள்ள கடந்த 27.10.2025 அன்று அறிவிப்பு செய்யப் பட்டது. இதில், 04.11.2025 முதல் 14.12.2025 வரை வீடுதோறும் சென்று கணக் கெடுப்பு படிவங்கள் வழங்கப்பட்டு பெறப்பட வேண்டும் என்றும், 19.12.2025 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட வேண்டும் என்றும், 19.12.2025 முதல் 18.01.2026 வரை உரிமைகோரல்கள் மற்றும் மறுப்புரைகள் பெறும் காலமாகவும், 19.12.2025 முதல் 10.02.2026 வரை விசாரணை மற்றும் சரிபார்ப்பு செய்து 17.02.2026 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு செய்யப்பட வேண்டும் என்றும் அறிவித்துள்ளது.

மேலும், இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ள ஏதுவாக, 27.12.2025 (சனி), 28.12.2025 (ஞாயிறு), 03.01.2026 (சனி) மற்றும் 04.01.2026 (ஞாயிறு) ஆகிய தினங்களில் ஒவ்வொரு வாக்குச்சாவடி மையங்களிலும் சிறப்பு முகாம் நடைபெற்றது.

பொது மக்கள் தங்களது பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தங்கள் தொடர்பான படிவங்களை பூர்த்தி செய்து இம்முகாம்களில் வழங்கிடு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து இன்று நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்2026 தொடர்பான சிறப்பு முகாமினை கும்மிடிப் பூண்டி சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட ஊத்துக்கோட்டை வட்டம், பெரிஞ்சேரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியிலும், ஊத்துக்கோட்டை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பெறப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக கேட்டறிந்தார்.

அதை தொடர்ந்து, திருவாரூர் சட்டமன்ற தொகு திக்கு உட்பட்ட 26.வேப்பம் பட்டு ஊராட்சி திருவள்ளூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பான சிறப்பு முகாமை மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் நேரில் பார்வை யிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதில் உதவி வாக்காளர் பதிவு அலுவலரும் ஊத்துக்கோட்டை வட்டாட்சியருமான ஆ.ராஜேஷ்குமார், வாக்குச் சாவடி நிலைய அலுவலர்கள் மற்றும் வருவாய் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மாவட்ட முதன்மை நீதிபதி சமீனா, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இளைஞர் நீதிக் குழுமத்தை குத்து விளக்கேற்றி வைத்தார்கள். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜாதா, குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் உமாமகேஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.

# அமித் ஷாவுடன் 2வது நாளாக எஸ்.பி.வேலுமணி சந்திப்பு..!!

திருச்சியில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுடன் 2வது நாளாக எஸ்.பி.வேலுமணி சந்தித்துள்ளார். அமித் ஷாவை நேற்று சந்தித்து பேசிய நிலையில் நேற்று ஸ்ரீரங்கம் சென்று வந்த அமித் ஷாவுடன் வேலுமணி சந்தித்தார். திருச்சியில் அமித் ஷாவை சந்திக்க காலை முதலே காத்திருந்தார்.

பேச்சுவார்த்தையில் பாஜகவுக்கு குறைந்தது 50 தொகுதிகள் வேண்டும் என்று அமித் ஷா கேட்டதாக தகவல் வெளியாகியது. தொகுதி பங்கீடு மற்றும் அதிமுக ஒருங்கிணைப்பு தொடர்பாக எடப்பாடியுடன் பேச்சு நடத்தவும் அமித் ஷா விருப்பம் தெரிவித்தார். தொகுதி பங்கீடு பேச்சு நடத்த எடப்பாடி பழனிசாமி வராத நிலையில் அமித் ஷாவுடன் வேலுமணி மீண்டும் சந்தித்தார். பிரதமர் மோடி தலைமையில் தமிழ்நாட்டில் என்.டி.ஏ. ஆட்சி அமையும் என்று நேற்று அமித் ஷா பேசினார்.

பாஜக கூட்டணி ஆட்சி அமைக்கும் என்று அமித் ஷா கூறிய நிலையில் அதிமுக தனித்தே ஆட்சி அமைக்கும் என எடப்பாடி பேசினார். புதுக்கோட்டை நிகழ்ச்சியில் கூட்டணியின் தலைவரான எடப்பாடியின் பெயரையே அமித் ஷா உச்சரிக்கவில்லை. நேற்று அமித் ஷாவை வரவேற்க எடப்பாடி செல்லாத நிலையில் அதிமுக நிர்வாகிகள். பாஜக நிகழ்ச்சியை புறக்கணித்தனர். ஆட்சி தொடர்பான மாறுபட்ட கருத்தால் அதிமுக, பாஜக கூட்டணியில் சலசலப்பு ஏற்பட்டுள்ள நிலையில் அமித் ஷாவுடன் எஸ்.பி.வேலுமணி சந்தித்தார்.



தமிழக வாழ்வுரிமைக் கட்சி ரணிப்பேட்டை மேற்கு மாவட்ட சார்பாக சார்பில் அவசர ஆலோசனை கூட்டம் ஆற்காட்டில் மாவட்ட தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது கூட்டத்தின் தலைமை என் விஸ்வநாதன் மாவட்ட செயலாளர் வரவேற்புரை எஸ் முகமது காசிம் மாவட்ட தலைவர் முன்னிலை விளா பக்கம் நகர செயலாளர் அன்பு ராணிப்பேட்டை நகர் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி ஆற்காடு ஒன்றிய செயலாளர் சிவசக்தி விசாரம் நகர செயலாளர் முகமது ஆசிம் மாவட்ட வழக்கறிஞர் அணி செயலாளர் தினேஷ் மாவட்ட பொருளாளர் சம்பத் கணியம்பாடி ஒன்றிய செயலாளர் வேண்டாமற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர் கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 1.கட்சியின் 15 ஆம் ஆண்டு துவக்க விழா முன்னிட்டு தெருமுனை பிரச்சாரம் பொதுக்கூட்டங்கள் நடத்துவது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது 2.2026 சட்டமன்ற தேர்தலில் தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் சொல்லுகின்ற கூட்டணிக்கு வளம் சேர்ப்பது கட்சி தனித்து நின்றால் தனித்து ஆற்காடு ராணிப்பேட்டை சட்டமன்ற போட்டு விடுவோம் போட்டியிடுவோம் என்பதை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது ராணிப்பேட்டை ஆற்காடு பஸ் நிலையங்கள் விரைந்து முடிக்க மக்கள் பயன்பாட்டுக் கொண்டு வர இக்கூட்டம் வலியுறுத்துகிறது

## குப்பைகள் கொட்ட இடம் பிடித்துக் கொடுத்தும் கொட்டாமல் இருக்கும் மாநகராட்சிஇதற்கு முட்டுக்கட்டை போடுவது யார்???

# திருப்பூர் மாநகராட்சி நிர்வாகத்தை கண்டித்து குப்பைக்குள் இறங்கி திமுக,, எம்எல்ஏ,, போராட்டம்!!

## பொதுமக்களும் திரண்டதால் பரபரப்பு





திருப்பூர்: ஜன.6–

ஜனவரி06 திருப்பூர் மாநகர் பகுதிகளில் குப்பைகள் கொட்டப்படும் பாறை குளிகள் நிரம்பியதால் சேகரிக்கப்படும் குப்பைகள் ஆங்காங்கே பல்வேறு இடங்களில் மலை போல் குவித்து வைக்கப்பட்டு வருகிறது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குப்பை குவிந்து கிடக்கும்இந்நிலையில் திருப்பூர் மாநகராட்சி உட்பட்ட 55 வது வார்டு முத்தையன் கோவில் நகர் பகுதியில் மாநகராட்சி நிர்வாகம் சார்பில் குப்பைகள் கொட்டப்பட்டு வந்தது.

இதனால் அங்கு சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் எனவே அதனை அகற்ற வேண்டுமென அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். திருப்பூர் தெற்கு சட்டமன்ற திமுக உறுப்பினர் செல்வராஜிடம் புகார் தெரிவித்தனர்.இதை அடுத்து அவர் இன்று காலை குப்பைகள் கொட்டப்பட்டு இருந்த முத்தையன் கோவில் நகர் பகுதிக்கு சென்றார்.

அங்கு மழை போல் குவிந்து கிடந்த குப்பைகளுக்குள் இறங்கி ஆய்வு செய்த அவர் உடனே அகற்றக்கோரி மாநகராட்சி அதிகாரியிடம் வலியுறுத்தினார்.

திமுக எம்எல்ஏ தர்ணா: குப்பைகளை அகற்றினால் தான் இங்கிருந்து செல்வேன் என்று கூறி திடீரென தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார்.

மேலும் அப்பகுதியில் பொதுமக்களும் குவிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது சம்பவம் இடத்திற்கு மாநகராட்சி அதிகாரிகள் சென்று பேச்சுவார்த்தை நடத்தினர்.

திருப்பூர் மாநகரில் குப்பை பிரச்சனை தொடர்ந்து நீடித்து வரும் நிலையில் இன்று திமுக எம்.எல்.ஏ. வே போராட்டத்தில் ஈடுபட்டது பரபரப்பு ஏற்படுத்தியுள்ளது.

# அரசுப் பேருந்துகளில் கைப்பேசி,காதொலி கருவிகளை பயன்படுத்த ஓட்டுநர்களுக்கு தடை.

சேலம். ஜன.6–

அரசுப் பேருந்து ஓட்டுநர்கள் கைப்பேசி மற்றும் காதொலிக் கருவிகளை பயன்படுத்த போக்குவரத்துக் கழகம் தடை விதித்துள்ளது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு உள்பட்டு 8 கோட்டங்கள் உள்ளன. இதன்மூலம் 22,000 பேருந்துகள் இயக்கப் பட்டு வருகின்றன. 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓட்டுநர்கள், நடத்துநர்கள் பணியாற்றி வருகின்றனர். அண்மைக்காலமாக பகல் வேளையிலும் அரசு பேருந்துகள் விபத்துக் குள்ளாகி உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

இதற்கு ஓட்டுநரின் அலட்சியமே காரணம் என்ற குற்றச்சாட்டு எழுகிறது. குறிப்பாக, தென்காசி, சிவகங்கை மாவட்டங்களில் அரசுப் பேருந்துகள் எதிரே வந்த பேருந்துடன் நேருக்குநேர் மோதி விபத்தில் சிக்கியதில் 12க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

அதுமட்டுமின்றி, சாலையில் இருந்து விலகி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாவது, பேருந்து செல்லும் சாலையை விடுத்து எதிர்சாலையை நோக்கி செல்வது, பயணிகளை அச்சத்திற்குள்ளாக்கும் வகையில் இயக்குவது, அதிவேகத்தில் கட்டுப்பாடு இல்லாமல் செல்வது போன்ற செயல்களில் ஓட்டுநர்கள் ஈடுபடுவதாக குற்றச்சாட்டு எழுந்தது.

தொடர் விபத்துகளால், பேருந்துகளுக்கு மட்டுமின்றி, உயிரிழந்தோருக்கும் இழப்பீடு வழங்க வேண்டிய நெருக்கடிக்கு போக்குவரத்துக் கழகம் உள்ளாகி வருகிறது. அதிகாரிகள் மேற்கொண்ட ஆய்வில் பெரும்பாலான ஓட்டுநர்கள் கைப்பேசியைப் பயன்படுத்துவதும், காதொலி சாதனம் (புளூடூத்) மூலம் பாடல்கள் கேட்டவாறும், குடும்பத்தினர், நண்பர்களுடன் உரையாடியபடியே செல்வதும் தெரியவந்தது.

இந்த நிலையில், சேலம் கோட்ட அரசு போக்குவரத்துக் கழகம் முதல்கட்டமாக ஓட்டுநர்கள் கைப்பேசி, காதொலிக் கருவிகளை பயன்படுத்த தடை விதித்துள்ளது. இது தொடர்பாக அனைத்து பேருந்துகளிலும் பயணிகள் அறியும் வண்ணம் ஒட்டு வில்லைகள் ஒட்டப்பட்டுள்ளன. அரசுப் பேருந்து ஓட்டுநர்கள் யாரேனும் கைப்பேசியிலோ, காதொலி கருவி மூலமாக பேசியவாறு பேருந்தை இயக்கினால் புகார் அளிக்க கைப்பேசி எண்ணையும் வெளியிட்டுள்ளது. மற்ற கோட்டங்களிலும் இந்த நடைமுறை விரைவில் அமல்படுத்தப்பட உள்ளது.

இது குறித்து நாமக்கல் பணிமனை அதிகாரிகள் கூறியதாவது:

பயணிகளின் பாதுகாப்பே எங்களுக்கு முக்கியம். மேலாண் இயக்குநர் உத்தரவின் பேரில் அரசு பேருந்து ஓட்டுநர்கள் பணியில் இருக்கும்போது கைப்பேசி, புளூடூத் பயன்படுத்த தடை விதித்துள்ளோம். நடத்துனர்கள் இல்லாமல் இயக்கப்படும் ஒன் டூ ஒன் பேருந்துகளில் நிர்வாகத்தில் இருந்து ஓட்டுநருக்கு அழைப்பு வந்தால் சாலையோரம் பேருந்தை நிறுத்திவிட்டு பேசவேண்டும். இதர பேருந்து ஓட்டுநர்கள், முக்கிய பேருந்து நிலையங்களில் தேநீர் அருந்துவதற்காக நிறுத்தும்போது பேருந்தை விட்டு விலகிச் சென்று பேசலாம். அவற்றை பயன்படுத்திய வாறு பேருந்தை இயக்குவது தெரிய வந்தால் அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நடத்துநர்களும் தேவை யின்றி கைப்பேசிகளை பயன்படுத்தக் கூடாது. இது தொடர்பாக 94892 03900 என்ற எண்ணில் பயணிகள் புகார் அளிக்கலாம்.

சேலம் கோட்ட அரசு போக்குவரத்துக் கழகத்தில் இந்த நடைமுறை அமலுக்கு வந்துள்ளது. படிப்படியாக மற்ற கோட்டங்களிலும் செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கிறோம் என்றனர்.

# வடமதுரை பத்திர பதிவு அலுவலகத்தில் போலி பட்டாக்கள் போடப்படுவதாகவும் மேலும் நிரந்தரமான சார்பதிவாளரை நியமனம் செய்ய வேண்டும் என்று பொதுமக்கள் வாக்குவாதம்.



திண்டுக்கல் ஜனவரி 6

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் தாலுகா வடமதுரை சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த சில மாதங்களாக பல்வேறு முறைகேடுகள் நடந்து வருவதாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருகின்றது

மேலும் லஞ்ச ஒழிப்புத் துறையும் கைகட்டி வேடிக்கை பார்க்கிறது என்று சுவரொட்டிகள் ஒட்டப் பட்டது

இந்த நிலையில் இன்று 50க்கும் மேற்பட்டோர் சார் பதிவாளர் அலுவலகத் தில் முறையாக பத்திர பதிவு செய்யவில்லை எனவும் மேலும் நிலங்களுக்கு போலி ஆவணங்கள் தயாரித்து பதிவு செய்துள்ளதாகவும் குற்றச்சாட்டு தெரிவித்தனர்

இது குறித்து பல முறை புகார் அளித்தும் இதுவரை எந்த ஒரு நடவடிக்கை எடுக்கவில்லை

மேலும் சார்பதிவாளர் அலுவலகத்தை முற்றுகையிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பல்வேறு பத்திரப்பணி வேலைகள் முடக்கம் அடைந்துள்ளது

மாதத்திற்கு ஒரு சார்பதிவாளர் இந்த அலுவலகத்தில் மாற்றப்படுவதால் தான் இந்த முறைகேடுகள் நடைபெறுகிறது உடனடியாக நிரந்தரமாக சார்பதிவாளர் நியமனம் செய்ய வேண்டும் நிரந்தர பணியாளர், நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும் கொடுக்கப்படும் மனுக்களுக்கு ரசீது வழங்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர். இதனால் சிறிது நேரம் பத்திர அலுவலகத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

# சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் பதவிக் காலத்தை மேலும் 2 ஆண்டுகள் நீட்டித்து தமிழ்நாடு அரசு உத்தரவு

சென்னை: ஜன.6–

சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் பதவிக் காலத்தை மேலும் 2 ஆண்டுகள் நீட்டித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. சமூகநீதி அளவுகோலானது சட்டப்படி முழுமையாக செயல்படுத்தப்படுகிறதா என்பதை குழு கண்காணிக்கும். பேராசிரியர் சுப.வீரபாண்டியன் தலைமையில் 7 பேர் கொண்ட குழுவை அமைத்து அரசு உத்தரவிட்டிருந்தது.

குழுவின் பதவிக் காலம் கடந்த டிச.23ம் தேதியுடன் முடிவடைந்த நிலையில் மேலும் 2 ஆண்டுகள் நீட்டித்து அரசு ஆணையிட்டுள்ளது.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421